# ஸ்ரீ அரவிந்தோபநிஷத்

– தமிழாக்கம் : பி.ஆர். கண்ணன், நவீ மும்பாய்

ஓம் பிரம்மம் ஒன்றே, இரண்டற்றது. இருப்பும் இல்லாமையும் பிரம்மத்தின் உருவங்கள்.[1] இருப்பு, இல்லாமை, இவற்றைக் கடந்து நிற்பதும் அதுவே. பிரம்மத்தைத் தவிர வேறொரு பொருள் இல்லை. மூன்று காலங்களிலும் (கடந்த, நிகழ், வருங்காலங்கள்) இருப்பதும், மூன்று காலங்களையும் கடந்து நிற்பதும் ஆகிய எல்லாமே பிரம்மம் ஒன்றே. உலகில் இருக்கும் பொருள் எதுவாகிலும் - அணுவைப் போன்ற சிறியதோ அல்லது பெரியதோ, உயர்ந்ததோ அல்லது தாழ்ந்ததோ, அவையெல்லாமே பிரம்மம்தான். உலகமும் பிரம்மமே. உலகம் ஸத்தியமானதே, பொய்யானதல்ல.

அந்த பிரம்மம் தான் எல்லாவற்றையும் கடந்கு நிற்கும் 'புருஷன்'. கடந்த, நிகழ், வருங்காலம் ஆகிய மூன்று காலங்களுக்கும் அப்பாற்பட்டது. எல்லா உலகங்ளுக்கும் அப்பாற்பட்டது. எல்லா உலகங்களையும் ஸ்ருஷ்டி செய்து அவற்றில் ஊடுருவி நிற்பது. இருப்பது, இல்லாமை இவையிரண்டையும் தாண்டி நிற்பது. தான் மாறாப் பொருளாக இருப்பது; ஞானசக்திமயமாக இருப்பது; ஆனந்தமயமாக இருப்பது. ஆதி அந்தமற்றது. எப்போதும் நிலைத்திருக்கும் கடவுள் (பகவான்)[2] அந்த பிரம்மமே.

அந்தப் பிரம்மம் குணங்களற்றதாக[3] இருக்கிறது. இருந்தும் குணங்களை அது ஏற்கிறது. குணங்களுடன், ஏன், எல்லையற்ற குணங்களுடன் விளங்கும்போதுகூட குணமற்ற நிலையையும் அது கொண்டதாயிருக்கிறது. தானே குணமற்ற நிலை, குணங்களுடன் கூடிய நிலை இவற்றைக் கடந்து நிற்கவும் செய்கிறது. உண்மையில் அது குணமற்றதும் அல்ல; குணமுள்ளதும் அல்ல. ஒரு வர்ணனைக்கும் அகப்படாத தனித்து நிற்கும் தத்துவமல்லவா அது.

அந்தப் பிரம்மம் உலகங்களைக் கடந்து இருந்துகொண்டு, உலகங்களைத் தாங்கவும் செய்கிறது. தானே உலகங்களாக ஆகி அவற்றில் உட்புகுகிறது. காலங்களைக் கடந்து நின்றுகொண்டு காலமாகவே ஆகிறது. அந்த மில்லாமல் இருந்துகொண்டு அந்தமுள்ள பொருளாகப் பிரகாசிக்கிறது. ஒன்றாக இருந்துகொண்டு பலவாகக் காட்சிகொடுக்கிறது. உருவமில்லாமல் இருந்துகொண்டு உருவங்களுடன் தோற்றமளிக்கிறது. இதெல்லாம் அந்தப் பிரம்மம் தன்னிடமுள்ள, வித்யை, அவித்யை[4] என்று இரண்டாக உள்ள ஞான சக்தியினால் செய்கிறது.

பிரம்மம் தானாகவே தாங்கும் பொருளாகவோ, தாங்கப்படும் பொருளாகவோ இல்லை. முடிவற்றதும் அல்ல; முடிவுள்ளதும் அல்ல. ஒன்றும் அல்லது; பலவும் அல்ல. உருவமற்றதும் அல்ல; உருவ முள்ளதும் அல்ல. அது ஒரு வர்ணனைக்கும் அகப்படாத தனித்து நிற்கும் தத்துவமல்லவா.

ஒன்றாகயிருப்பது, பலவாக இருப்பது; முடிவில்லாமல் இருப்பது, முடிவுள்ளதாக இருப்பது; இவையெல்லாம் பெயர்கள் (நாம) மாத்திரமே. ஞானமயமாக உள்ள இந்த மாறிக் கொண்டிருக்கும் உலகில் ஞானமாகிய ஆத்மாவில் அவை பிரகாசிக்கின்றன.[5]

ஓம். அந்த எல்லாவற்றையும் கடந்து நிற்கும் தத்துவம் எப்போதும் நிலைத்துநிற்கும் தத்துவமாக உள்ளது. அந்த அடிப்படையான நிலையான தத்துவம், ஞானமே வடிவானதும், எப்போதும் மாறிக்கொண்டிருப்பதுமான உலகாக, ஞானமாகிய ஆத்மாவின் கண் பிரகாசிக்கிறது. ஸத்தியமாக இருக்கும் பகவானின் ஸத்திய ஒளிதான் அது.

எவ்வாறு சூரியனின் நிழலுருவம் அமைதியான நீர்நிலையில் ஒன்றாகவும், அசையும் நீரில் பலவாகவும் தோன்றினாலும், சூரியன் ஸத்தியப் பொருள்; சூரியனின் நிழலுருவமும் ஸத்தியமே. ஒளிவிடும் சூரியனின் ஒளி நிழலுருவத்திலும் உள்ளது. அது கனவல்ல. உண்மையான ஒளியே.

எவ்வாறு சூரியனின் சோதி தன் சக்தியைக் கொண்டே தனக்கு எதிர்ப்பட்ட உலகம் முழுவதையும் ஓடி ஓடிப் பிரகாசிக்கும்படி செய்கிறதோ, அந்த சோதி ஸத்தியப் பொருளே; உண்மையான சூரியனின் ஸத்தியமான பிரகாசமே அது. அது பொய்யான ஒளி அல்ல.

எவ்வாறு சூரியனின் ஒளிவட்டமான பிம்பம் அதுவே சூரியனாகாதோ , ஆனால் சூரியனின் இயற்கையான ஒளிவிடும் தன்மையை இந்த பௌதீகமான [6] பிம்பம் பௌதீகமான நம் அறிவில் வெளிப்படுத்துகிறதோ ; சூரியன் அந்த பிம்ப உருவத்தைக் கடந்த உண்மைப்பொருள் ; அந்த பிம்ப உருவமும் ஸத்தியம். அவ்வுருவம் உண்மைப்பொருளான சூரியனின் உண்மைப் பிரகாசமே. அது மாயையுடன் கூடியதல்ல. அது உண்மையான சூரியனின் உண்மை ஒளியே.

அவ்வாறே இங்கு இந்த உலகமும் பிரம்மமாகிய பகவானின் உண்மை ஒளியே. அது கனவன்று. மாயையுடன் கூடியதன்று. பொய்யான பிரகாசமும் அன்று. உண்மைப்
பொருளான பகவானின் உண்மையான ஒளியே அது. தானே பகவானாக இல்லாவிட்டாலும், இந்த உலகமும் பகவான் என்று சொல்லக் கூடியதே. இது உயர்ந்ததான மாயை. இது ரகஸ்யமயமான யோகேச்வரனான கிருஷ்ணனுடைய யோக மஹிமை. இது ஞானசக்தியின் ஆனந்தமயமான லீலை. விளையாட்டு. பரமபுருஷனின் சிந்தனைக்கெட்டாத போக்கு.
'இங்கு காண்பதெல்லாம் நடைமுறைக்கு ஸத்தியமேயன்றி, பிரம்மத்தை நோக்குங்கால் உண்மை யில்லாததே' என்று சொல்வது, மனதைத் திருப்தி செய்துகொள்வதற்கும், அறிவினுக்கு ஏற்றாற்போலும் கொள்வதுதான். ஸத்தியமான பிரம்மத்தில் உண்மையில்லாதது எதுவுமே கிடையாது. இவ்வாறு எது ஒளிர்கிறதோ அது உலகில் காணும் ஆனந்தமேதான்.

ஓம். அந்த எல்லாவற்றையும் கடந்து நிற்கும் தத்துவம் எப்போதும் நிலைத்து நிற்கும் தத்துவமாக உள்ளது. அதுவே ஞானவடிவம். அதுவே ஆனந்தம். எதெல்லாம் ஆனந்தமற்றதாகவும், துக்கமுள்ளதாகவும், வலிமையில்லாததாகவும், அஞ்ஞானமாகவும் நமக்குத் தோற்றமளிக்கிறதோ, அது ஆனந்தத்தின் மாறுபட்ட நிலையே; ஏன், அது ஆனந்தத்தின் விளையாட்டே.

இந்த உடலைத் தாங்கி நிற்கும் ஜீவன், ஆனந்தமயமான பகவானே தன்னை மறைத்துக் கொண்டு தன்னுடைய ஒளியேயான உலகமாகிய பிரம்மத்தை அனுபவிப்பதற்காக

இறங்கி வந்துள்ளவர்தான். இங்கு அனுபவிக்கும் துக்கமும் ஆனந்தமயமான அனுபவந்தான். ஆனந்தமயமான பகவானே அதனுள் ஆனந்தத்தை அனுபவிக்கிறுர்.

யார் தான் ஆனந்த மின்மையை (துக்கத்தை) அனுபவிக்கத் துணிவார்? எவர் பூர்ணமான ஆனந்தவடிவாக இருக்கிறாரொ, அவரால் தான் முடியும். எவர் நிரானந்தமயமாக (ஆனந்தமற்றவராக) இருக்கிறாரோ, அவர் ஆனந்தமற்ற நிலையை அனுபவிக்கத் துணிந்தால், அதை அனுபவிக்கமுடியாது; ஆனந்தமின்றி அழிவையே அடைவார்.

எந்த பலங்குன்றியவனுல் உடலெடுக்க முடியும்? எவர் எல்லா சக்திகளும் நிரம்பப் பெற்றவரோ, அவரால் தான் முடியும். பலங்குன்றியவன் சக்தி இல்லாதபடியால் உட்காரக் கூட முடியாதவராகிவிடுவார்; சக்தியில்லாமல் அழிவையடைவார்.

யாரால் அஞ்ஞானத்தில் உட்புகமுடியும்? எவர் எல்லா ஞானமும் நிரம்பப் பெற்றவரோ, அவரால் தான் முடியும். அஞ்ஞானியாக இருந்தால் அஞ்ஞானமாகிற இருட்டில் நிற்கக் கூட முடியாதவராக இருப்பார். அஞ்ஞானியாகவே இருந்துகொண்டு ஞானத்தின் உதவியில்லாமல் அழிவையடைவார். ஞானத்தின் விளையாட்டே அஞ்ஞானமாகும்; தன்னுள் தன்னை மறைத்துக் கொள்ளுதலாகும். சக்தியின் விளையாட்டே பலமின்மையாகும்; ஆனந்தத்தின் விளையாட்டே ஆனந்தமின்மையாகும். தன்னுள் தன்னை மறைத்துக்கொள்ளுதல் ஆகும்.

ஜீவன் ஆனந்தத்துடன் சிரிக்கிறுன். ஆனந்தத்துடன் அழுகிறுன். கண்ணீர் விடுகிறுன். தமோமயமான (இருட்டான, அதாவது சோம்பலையும் உறக்கத்தையும் தூண்டும்) ஆனந்தத்தில் ஒளிவிடுபவன் போல, கடும் கஷ்டங்களாலும், தீவிரமான சுகங்களாலும் உந்தப்பட்டு அவன் ஆனந்தத்தில் பளிச்சிடுகிறுன். அந்த ஆனந்தத்தின் தாமஸ (அதாவது சோம்பலையும் உறக்கத்தையும் தூண்டும்) அம்சத்தை முழுமையாக
அனுபவிப்பதற்காக தாமஸவடிவுகொண்டு தன் உண்மையான ஆனந்தத்தை (ஆனந்த சொரூபத்தை) மறைத்துக் கொள்கிறுன்.

இந்த ஜீவனுடைய எண்ணங்களாகிய, ''நான் அந்தமுள்ளவன்; சக்தியில்லாதவன்; பலங்குன்றியவன்; துக்கத்தில் உழல்பவன்'' இவைகளின் அடிப்படை அஞ்ஞானமே. ''என்னுடைய முயற்சியினுல், தவத்தினுல், மரணத்தினால் செய்ய வேண்டியது, அறியவேண்டியது, அடைய வேண்டியது நீ. நான் நீயல்ல. உனக்கு எது நல்லதோ எனக்கு அது நல்லதல்ல. எதனுல் உனக்கு லாபமோ, அதனுல் எனக்கு நஷ்டமே. உன்னைக்கொன்றுல் நான் சுகமாக இருப்பேன். என்னுடைய துக்கத்தினுல், நஷ்டத்தினுல், மரணத்தினால் உனக்கு சுகம் கிடைக்குமாறு செய்யுமளவுக்கு நான் ஸாத்விகன் (நற்பண்புமிக்கவன்) அல்லன்'' என்று இவ்வாறு மனதில் எழும் எண்ணங்கள் அஞ்ஞானத்தின் வடிவமே.

அகங்காரம் (தான் என்கிற எண்ணம்) தான் இதன் விதை. அகங்காரம் அகன்றுல் அஞ்ஞானத்திலிருந்து விடுதலை. அஞ்ஞானம் அகன்றுல் துக்கத்திலிருந்து விடுதலை. 'நான் ஆனந்தமயமானவன்; அந்த பரமாத்மாவே நான்; ஒருவனே; நான் அந்தமற்றவன்; நானே எல்லாம்' என்று உணர்ந்து ஜீவன் ஆனந்தமயமாக ஆகிறுன்; ஆனந்தமாகவே ஆகிறுன்.

**இதுதான் மோக்ஷம். முக்திபெற்ற அந்த ஜீவன் எல்லா அநுபவங்களையும் அனுபவிக்கிறான். எல்லா ஆனந்தங்களையும் முடிவில்லாமல் அனுபவிக்கும் அவன், ஆனந்தங்கள் முடிவுறும்போது அவற்றின் பிரிவினால் வருந்துவதில்லை. முடிவுள்ள அந்த ஆனந்தங்களை அனுபவிக்கும்போது அவன் முடிவற்ற பரமாத்மாவிடமிருந்து பிரிவதில்லை. அவன் ஒருவனாக இருக்கிறான்; பலவாகவும் இருக்கிறான். பிறப்பில்லாத அவன் பிறப்பவன் போல் பிறந்தாலும் பிறப்பதில்லை. கட்டுண்பதில்லை. அவனுக்குப் பிறப்பில்லை. அவன் 'நான் ஆத்மாவின்கண் ஆத்மாவைக் கொண்டு ஆத்மாவைப் பிரகாசப்படுத்துகிறேன்' என்ற ஞானத்தினால் எப்போதும் முக்தனாகவே (விடுதலையடைந்தவனாகவே) விளையாடுகிறான்.**

**ஆனந்தத்தின் புதல்வர்களே ! இந்த உலகம் விளையாட்டிற்காகவே. இது ஆனந்தத்தைப் பெறுவதற்காக விளையாட்டுமயமாக உள்ளது என்று உணர்ந்து விளையாடுவீராக. அனுபவத்திற்குரிய ஓ• ரே பொருளான பகவானை எல்லாப் பொருட்களிலும் கண்டு அநுபவிப்பீராக.**

**பகவானால் உத்தரவிடப்பட்டு ஆனந்தத்தை நான் எடுத்துரைக்கிறேன். ஆனந்தத்தின் புதல்வர்களே ! இருளை அகற்றி ஆனந்தம் ஒளிவிடட்டும்.**

*குறிப்புகள்:*

*1 இருப்பு என்பது புத்தி உள்பட புலன்களுக்குப் புலப்படுவது. இல்லாதது என்பது கற்பனைக்கும் எட்டாத பொருள்.*

*2 இங்கு ஸ்ரீ அரவிந்தர் நிர்க்குண பிரம்மமே ஸகுண பிரம்மமாக வடிவெடுப்பதைக் குறிப்பிடுகிறார்.*

*3 குணங்கள் எனப்படுபவை ஸ்ருஷ்டியில் வ்யாபித்திருக்கும் ஸத்வகுணம் , ரஜோகுணம், தமோகுணம் ஆகிய முக்குணங்கள்.*

*4 வித்யை என்பது அறிவு - உள்ளதை உள்ளபடி காண்பது. அவித்யை என்பது அறிவின்மை - இல்லாததை இருப்பதாக உணர்வதும் , இருப்பதைத் தவறாகக் காண்பதும் ஆகும்.*

*5 ஞானமாகிய ஆத்மாவின் அடிப்படையின்மேல் நாமங்களும் உருவங்களும் பிரகாசிக்கின்றன என்பது பொருள்.*

*6 ஸ்ரீ அரவிந்தர் இந்த இடத்தில் 'அன்னமயமான' உருவம் , 'அன்னமயமான' நம் அறிவில் வெளிப்படுகிறது அன்ற சொற்களை உபயோகிக்கிறார். அன்னமயம் என்பது உணவையே பிரதானமாகக் கொண்ட அடிப்படையான பௌதீக உடலைக் (அன்னமயகோசம்) குறிக்கும்.*